# Sworn statement
# Crl.MP.No. 224/2025

| பெயர்.திருமதி.கண்ணகி | க/பெ.திரு. முருகன் | நாள். 21.01.2026 |
|---|---|---|

**சத்திய பிரமாணம் செய்யப்படுகிறார்.**

என்னுடைய கணவர் சென்னையில் டிராவல்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறார். நாங்கள் எங்கள் பூர்வீக ஊரான நுகும்பல் கிராமத்தின் அருகில் சொந்தமாக இடம் வாங்க முயற்சி செய்தோம். நாங்கள் நிலம் எதாவது விற்பனைக்கு வந்தால் சொல்ல சொல்லும்படி நில தரகர் வேலை செய்யும் 4 அல்லது 5 நபர்களிடம் சொல்லி வைத்தோம். களக்காடியை சேர்ந்த ஏழுமலை என்பவர் எங்கள் ஊரில் அருகிலேயே இடம் உள்ளது வாங்க பார்க்கலாம் என்று சொன்னார். நாங்களும் சென்று பார்த்தோம். நுங்கம்பாக்கத்தில் நிலத்தின் உரிமையாளர் இருப்பதாக சொன்னார். நானும், எனது கணவரும் சென்று பார்த்தோம். இடம் எங்களுக்கு பிடித்துவிட்டது. அதனால் நிலத்தை வாங்கலாம் என்று முடிவு செய்தோம். கூவத்துரை சேர்ந்த ராமசந்திரன் தான் நிலத்திற்கு விலை சொல்வார் என்று ராமசந்திரனை ஏழுமலை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார். அப்போது விலை பேசி 1 செண்டுக்கு 60,000/- வீதம் 30 செண்டுக்கு பதினெட்டு லட்சம் என விலை நிர்ணயம் செய்தோம். என் கணவர் சென்னையில் வேலை செய்வதால் அவருக்கு அடிக்கடி விடுமுறை கிடைக்காது என்பதால் என் கணவரின் பங்காளியான வெங்கடேசன் என்பவரிடம் அந்த இடத்தை நல்லபடியாக முடித்து தரும்படி கேட்டோம். வெங்கடேசனும் பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தால் கிரையம் வாங்கி தருவதாக கூறினார். நாங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்பதால் எனக்கு ரூ.7,50,000/-த்துக்கு தாட்கோ லோன் கிடைத்தது. அந்த வரைவோலையை வங்கியில் எனக்கு

கொடுத்தார்கள். அந்த வரைவோலையை நானும், எனது கணவரும் வெங்கடேசனிடம் கொடுத்து அதை நில உரிமையாளரான முகமது பாரூக்கிடம் கொடுத்துவிடும்படி சொன்னோம். வெங்கடேசன் அவரிடம் பேசியதாக சொல்லி மொத்தமாக ரூ.10,50,000/- கேட்பதாக சொன்னார். அதனால் நான் எனது வங்கி கணக்கிலிருந்து ரூபாய் இரண்டு லட்சமும், எனது கணவர் வங்கி கணக்கில் இருந்து ரூபாய் இரண்டு லட்சமும் சிறுக சிறுக கொடுத்தோம். மொத்தமாக நாங்கள் வெங்கடேசனிடம் ரூபாய்.11,20,000/- கொடுத்தோம். வெங்கடேசன் என்பவர் ராமசந்திரனிடம் ரூபாய்.5,50,000/-மும், ஏழுமலையிடம் ரூபாய் 5 லட்சமும், கொடுத்ததாக கூறி விற்பனை உடன்படிக்கையை எங்களிடம் கொடுத்தார். நாங்கள் அதை வாங்கி படித்து பார்த்துவிட்டு நிலத்தின் உரிமையாளரான முகமது பாரூக் என்பவரிடம் பணத்தை கொடுக்காமல் ஏன் அவரிடம் பணத்தை கொடுத்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் இவர்கள் ஏமாற்றமாட்டார்கள், மீதி பணத்தை கட்டும்போது நிலத்தின் உரிமையாளர் வருவார் என்றும் நிலத்திற்கு ராமசந்திரன் பெயரில் பொது அதிகார ஆவணம் இருப்பதாகவும் கூறினார். மேலும் அவர் நான் இருக்கும்போது ஏன் பயப்படுகிறாய் நிலத்தை நான் முடித்து தருகிறேன் என்று சொன்னார். விற்பனை உடன்படிக்கையை அவரும் சாட்சி கையெழுத்து செய்திருப்பதால் கிரையம் எழுதி தரவில்லை என்றால் என்னவேண்டுமானாலும் செய்து கொள் என்று கூறினார். மீதி பணத்தை தயார் செய்தால் உடனடியாக கிரையம் எழுதி தருவராக வெங்கடேசன், ராமசந்திரன் ஆகியோர்கள் சொன்னார்கள். அதனால் நாங்கள் கிரைய ஒப்பந்த காலமான 3 மாதத்திற்குள்

மீதி தொகையை தயார்கிவிட்டது கிரையம் எழுதி தாங்கள் என்று சொன்னோம். அதற்கு வெங்கடேசன் என்ன நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்கள் ஒவ்வொரு முறையும் கேட்கும்போதும் ஒரு வாரம், 10 நாள் என்று காலம் தாழ்த்தி வந்தார்கள். அதனால் நாங்கள் ராமசந்திரனை கேட்டோம். அதற்கு ராமச்ந்திரன் நில உரிமையாளருக்கு உடல்நிலை சரியில்லை ஆடிட்டிங் நடக்கிறது என ஒவ்வொரு காரணமாக கூறி வந்தார். அதன் பின்னர் ஏழுமலையிடம் கேட்டபோது அவரும் நாங்கள் உங்களை ஏமாற்றமாட்டோம் கொஞ்சம் பொறு என்று சொன்னார். அதன்பிறகு நாங்கள் சந்தேகப்படுத்து வில்லங்க சானறிதழ் எடுத்து பார்த்தபோது இடத்தை கோயம்பத்துரை சேர்ந்த ஜெயராணி என்பவருக்கு ஏற்கனவே விற்பனை செய்துவிட்ட விவரம் தெரிய வந்தது. இதை பற்றி வெங்கடேசனிடம் கேட்டபோது பணத்தை திரும்பி வாங்கி கொடுத்துவிடுவதாக கூறினார். நானும் மூன்று பேரிடம் பணத்தை திரும்பி வாங்கி தருவதாக சொன்னார். எங்களை பணம் தருவதாக காலம் தாழ்த்தி வந்ததால் வெங்கடேசன் வீட்டுக்கு சென்றோம். அப்போது அவர் பணத்தை தரமுடியாது என்ன செய்ய முடியும் என தகாத வார்த்தையால் பேசினார். என் பிள்ளையை வைத்து அடிப்போம் வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னார். அதனால் நாங்கள் 28.03.2025 அன்று காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். பின்னர் நாங்கள் 31.03.2025 அன்று சித்தாமூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் எதிரிகளை அழைத்து விசாரணை செய்யவே இல்லை. அதனால் இந்த தனிப்புகாரை தாக்கல் செய்தோம். அதனால் மனுவில் கண்டபடி எதிரிகளுக்கு

அழைப்பாணை வைத்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.N.Valliamma
DM Cum JM
Cheyyur (FAC)